# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,
## 1990 சுவசெரிய மன்றச் சட்டம்

---

*(2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, யூலை மாதம் 06 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 28.00** **தபாற் செலவு : ரூபா 55.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,*
## *1990 சுவசெரிய மன்றச் சட்டம்*

[*2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 54/2017*

***1990 சுவசெரிய மன்றத்தினை தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*முன்னுரை.*

மேல் மற்றும் தென் மாகாணங்களில் தொடக்கமாக கட்டணம் இன்றி வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பு பிணியாளர் வண்டி சேவை ஒன்றை இந்திய அரசாங்கத்திடமிருந்தான அளிப்பு ஒன்றினால் தாபிக்கப்பட்ட விரிவான, விரைவான, நம்பகத் தன்மையான மற்றும் தரமான வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பு சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் அத்தியாவசியமான சேவை ஒன்றாக வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பு பிணியாளர் வண்டிச் சேவையினை அரசாங்கம் அடையாளம் கண்டுவந்துள்ளதாதலாலும்:

அத்துடன் முழுத் தீவையும் உள்ளடக்கி வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பு பிணியாளர் வண்டிச் சேவையை விரிவாக்குவதற்கும் நிலைபெறுதகுமுறை ஒன்றில் அத்தகைய சேவை சுமூகமாக செயற்படுவதை உறுதிப்படுத்து வதற்கும் தற்போது அவசியமாகவுள்ளதாதலாலும்:

அத்துடன் எவரேனும் ஆளுக்கு கட்டணம் இன்றி வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பு பிணியாளர் வண்டிச் சேவை யினை பயனுறுதியுள்ளவகையில் நிறைவேற்றுவதற்காக மன்றம் ஒன்றினைத் தாபிப்பதற்கும் அத்துடன் அத்தகைய மன்றத்தின் தத்துவங்களையும் பணிகளையும் மற்றும் கடமைகளையும் குறித்துரைப்பதற்கும் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, 1990 சுவசெரிய மன்றச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### *1990 சுவசெரிய மன்றத்தைத் தாபித்தல்*

*1990 சுவசெரிய மன்றத்தினைத் தாபித்தல்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1990 சுவசெரிய மன்றம் என அழைக்கப்பட வேண்டிய மன்றமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையும்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

*மன்றத்தின் குறிக்கோள்கள்.*

**3.** மன்றத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) எவரேனும் ஆளுக்கு கட்டணம் இன்றி வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான பிணியாளர் வண்டிச் சேவைகள் மற்றும் அவசர நிலைமை பதில் சேவைகளை வழங்குதல்; அத்துடன்

(ஆ) ஆளொருவர் அருகிலுள்ள சுகாதாரக் கவனிப்பு வழங்குனரை அடைகின்றவரை பாதுகாப்பு மற்றும் சிகிச்சைசார் வேலை செய்கின்ற சூழல் ஒன்றில் உடனடியானதும் பயனுறுதிவாய்ந்த கட்டணம் இன்றிய வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பை வழங்குதல்.

*மன்றத்தின் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும்.*

**4.** மன்றத்தின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் பின்வருவனவாதல் வேண்டும்-

(அ) ஏதேனும் கட்டணம் இன்றி எவரேனும் ஆளிற்கான பாதுகாப்பு மற்றும் சிசிச்சைசார் வேலை செய்கின்ற சூழல் ஒன்றில் பிணியாளர் வண்டி சேவைகள், அவசரநிலைமை பதில் சேவைகள் மற்றும் வாழ்க்கை பாதுகாக்கின்ற வைத்திய சாலைக்கு செல்வதற்கு முன்னரான கவனிப்பு வழங்குதல்;

(ஆ) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முகாமைக் கட்டணம் ஒன்றின்மேல் கட்டணம் இன்றி இலாபநோக்கமற்ற ஒழுங்கமைப்புகளினால் வழங்கப்பட்ட பயிற்சி, சாதனங்களின் வழங்குகை மற்றும் வேறு பிணியாளர் வண்டிச் சேவைகளை முகாமைசெய்தல் உட்பட எவரேனும் ஆளுக்கு மன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு அத்தகைய சேவைகள் வழங்குதல்;

(இ) மன்றத்திற்குச் சொந்தமான அசையும் அல்லது அசையா ஆதனத்தினை வைத்திருத்தல், எடுத்து குத்தகைக்கு கொடுத்தல், வாடகைக்கு எடுத்தல், விற்றல், ஈடுவைத்தல், மானியம் குறித்தளித்தல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையாக கையுதிர்த்தல்;

(ஈ) பணமாக அல்லது வேறுவகையாக மானியங்கள் கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுதல்;

(உ) சபையினால் நேரடியாகவோ அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவோ மன்றத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளை செய்துகொள்ளுதலும் நிறைவேற்றுதலும்;

(ஊ) தோதானதென கருதுகின்றவாறான ஏதேனும் வங்கியுடன் ஏதேனும் கணக்கை திறத்தலும் பேணுதலும் அத்துடன் அத்தகைய கணக்கு ஏற்புடையற்பாலதான நிலவுகின்ற எழுத்திலான சட்டத்திற்கிணங்க செயற்படுத்தலும் வேண்டும்;

(எ) மன்றத்தின் நிதியத்தினை முகாமைசெய்தலும் கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும் மற்றும் செயற்படுத்தலும்; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர் விளைவாக அல்லது உசிதமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தலும் அல்லது இச்சட்டத்தின்கீழ் மன்றத்திற்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகித்தலும் கடமைகளை நிறைவேற்றுதலும்.

ஆதனத்தை வைத்திருப்பதற்கான மன்றத்தின் தத்துவம்.

**5.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, மரணசாசன கொடை என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் மன்றத்திற்கு உரித்தாக்கப்படக்கூடியதான அசையும் அல்லது அசையா ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருப்பதற்குமென அம்மன்றமானது சட்டத்தில் ஆற்றலுடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மன்றத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் II

### அலுவல்களை நிருவகித்தலும் முகாமை செய்தலும்

சபையில் உரித்தாக்கப்பட்ட மன்றத்திற்கான நிருவாகம்.

**6.** (1) மன்றத்தின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமை செய்தலும் முகாமைச்சபை ஒன்றினால் உரித்தாக்கப்படுதல் வேண்டும் (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) சபையானது மன்றத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக இச்சட்டத்தினால் மன்றத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதற்கு குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது விதிக்கப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும் மற்றும் கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

**7**. சபையானது - *சபையினை அமைத்துருவாக்கல்.*

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும் அதாவது -

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(ii) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(iii) பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(ஆ) கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருப்பவர்களும் அத்துடன் மருத்துவ விஞ்ஞானம், மருந்தியல், மருத்துவ தொழில்நுட்பம், நிதி, முகாமை, நிருவாகம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் அனுபவத்தைக் கொண்டிருப்பவர்களுமான (இதனகத்துப்பின்னர் ''நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறு நான்கு உறுப்பினர்களை,

கொண்டமைந்ததாதல் வேண்டும்.

**8**. (1) சனாதிபதி சபையின் தவிசாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும். *சபையின் தவிசாளர்.*

(2) தவிசாளர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகலானது எந்தத் திகதியில் அது சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து பயனுறுவதாதலும் வேண்டும்.

(3) சனாதிபதி தவிசாளரை அவரின் பதவியிலிருந்து குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக அகற்றலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய, தவிசாளரின் பதவிக்காலமானது சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதி ஆதல் வேண்டும்.

(5) தவிசாளர் சுகவீனம் காரணமாக, வேறு இயலாமை காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக அவரது பதவிக் கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்றுவதற்கு இயலாதவராக இருக்கின்றவிடத்து, சனாதிபதி நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை தமது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராக செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.

சபையின் உறுப்பினராக இருப்பதி லிருந்தான தகைமையீனங்கள்.

**9**. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வரின்;

(ஆ) அவர் இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(இ) அவர் இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத் தப்படின்;

(ஈ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆளொருவர் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக இருப்பின்;

(உ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற் றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துக்கொண்டிருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்;

(ஊ) மன்றத்தினால் அல்லது மன்றத்தின் சார்பில் செய்யப் பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை கொண்டிருப்பின் அல்லது ஏதேனும் நன்மையை துய்ப்பின்; அல்லது

(எ) சபையின் உறுப்பினர் என்றவகையில் அவரது பணி களை அவரால் நிறைவேற்றப்படுகையில் அதனை பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையை கொண்டிருப்பின்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

**10**. நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி விலகுவதால், இறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப் படுவதால் முன்னரே அவரது பதவிவறிதாகியிருந்தாலன்றி, அவருடைய நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருக்கும் உறுப்பினர் தவிர வேறு அத்தகைய உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடைய வராதலும் வேண்டும்.

உறுப்பினர்களை பதவியில் இருந்து அகற்றுதலும் அவர்கள் பதவியிலிருந்து விலகுதலும்.

**11**. (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் சனாதி பதிக்கு முகவரியிடப்பட்ட கடிதம்மூலம் அவரது பதவியிலிருந்து எந்த நேரத்திலும் விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவி விலகலானது எந்தத் தேதியன்று எழுத்தில் சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து பயனுறு வதாதலும் வேண்டும்.

(2) சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிப் பணிகளை புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து சனாதிபதி 7 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பதவியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கென வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(3) சனாதிபதி நியமிக்கப்பட்ட உறுப்பினரை குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறக்கின்றவிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து சனாதிபதி 7 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவருடைய இடத்தில் வேறொரு ஆளை நியமிக்கலாம் என்பதுடன், அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் எவ்வுறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தலும் வேண்டும்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்.

**12.** (1) சபையின் கூட்டங்கள் குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதத்திலும் ஒருதடவையாவது நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சபையின் கூட்டம் ஒன்றிற்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காதவிடத்தில் சமுகமாயிருந்த உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தீர்மானத்திற்கான எல்லா வினாக்களும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருந்த உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். சமமான வாக்குகள் இருக்கும்பட்சத்தில், தவிசாளர் தனது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய சபையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களையும் கொண்டுநடாத்தலாம்.

**13.** சபையானது அதனது உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன், சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணங்களினால் மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணத்தினால் செல்லுபடியற்றதாக இருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாக கருதப்படுதலோ ஆகாது.

*மன்றத்தின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணத்தினால் செல்லுபடியற்றதாக கருதப்படுதலாகாது.*

**14.** சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தின் உறுப்பினர்களுக்கு ஊதியமளித்தல்.*

**15.** (1) மன்றத்தின் இலச்சினையானது காலத்திற்குக்காலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

*மன்றத்தின் இலச்சினை.*

(2) மன்றத்தின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) மன்றத்தின் இலச்சினையானது சபையின் அனுமதியுடன் தவிசாளர் முன்னிலையிலும் சபையின் வேறு உறுப்பினர் ஒருவர் முன்னிலையிலும் தவிர ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்திலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மன்றத்தின் இலச்சினையானது ஏதேனும் சாதனம் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுகின்ற போது தவிசாளர் அந்நேரத்தில் சமுகமாயிருப்பதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, தவிசாளரினால் அது சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய சாதனம் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) எந்தச் சாதனங்கள் அல்லது ஆவணங்களுக்கு மன்றத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டிருந்ததோ அச்சாதனங்கள் அல்லது ஆவணங்களின் பதிவேடொன்றை மன்றமானது பேணுதல் வேண்டும்.

## பாகம் III

### மன்றத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரும் பணியாட்டொகுதியும்

*மன்றத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரை நியமித்தல்.*

**16.** (1) சபையானது, அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தகைமை மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தினையும் கருத்திற்கொண்டும் (இச்சட்டத்தில் "பி.நி.அ" என குறிப்பீடுசெய்யப்படும்) பிரதான நிறைவேற்று அலுவலர் ஒருவரை மன்றத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும்.

(2) சபையானது, அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பி.நி.அ இன் பதவிக்கான தகைமையையும் ஆட்சேர்ப்பு திட்டத்தையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) பி.நி.அ ஆனவர் சபையின் பொதுவான பணிப்புரைகளுக்கும் மேற்பார்வைக்கும் அமைய-

(அ) பணியாட்டொகுதியின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு உட்பட மன்றத்தின் அலுவல்களின் நிருவாகம் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) சபையின் எல்லா தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்கான பொறுப்புடையவராதல் வேண்டும்; அத்துடன்

(இ) சபையினால் அவருக்கு குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிகள் யாவற்றையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) பி.நி.அ ஆனவர் ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருந்து பேசுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்; ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராக மாட்டார்.

(5) பி.நி.அ ஆனவர் அவரது தத்துவங்கள் அல்லது பணிகளில் எதனையும் மன்றத்தின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம் என்பதுடன், எவ்வலுவலருக்கு அத்தகைய ஏதேனும் தத்துவம் அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அவ்வலுவலர் பி.நி.அ இன் பணிப்புரைகளுக்கு அமைய அவற்றை பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

(6) சபையானது பின்வரும் காரணங்களுக்காக பி.நி.அ. ஆனவரை பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) அவர் தனது கடமைகளை நிறைவேற்ற நிரந்தரமாக இயலாதவராகவரின்;

(ஆ) அவர் சபையின் அபிப்பிராயப்படி, மோசடியான அல்லது சட்டவிரோத தன்மையினதான அல்லது மன்றத்தின் அக்கறைகளுக்கு பங்கம்விளைவிக்கின்ற ஏதேனும் செயலை செய்துள்ளார் எனின்; அல்லது

(இ) மன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளார் எனின்.

(7) பி.நி.அ. ஆனவருக்கு சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தின் பணியாட்டொகுதி.*

**17.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, மன்றமானது அதனது தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் வினைத்திறனாக பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய ஊழியர்களை தொழிலுக்கு அமர்த்தலாம் அல்லது நியமிக்கலாம்.

(2) சபையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் அவர்களை பதவியிலிருந்து நீக்குதலும்;

(ஆ) மன்றத்தின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானித்தல்; அத்துடன்

(இ) எந்த வீதங்களில் அத்தகைய அலுவலர்கள் அல்லது ஊழியர்களுக்கு அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஊழியமளிக்கப்படுதல் வேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயித்தல்.

(3) மன்றத்தின் எல்லா ஊழியர்களும் தொழில் கிடைக்கப்பெற்று ஒரு மாதகாலத்தினுள் அவர்களின் நெருங்கிய உறவுகளின் அக்கறை உட்பட மன்றத்தின் அலுவல்கள் மற்றும் கொடுக்கல் வாங்கலில் அத்தகைய ஊழியர்கள் அக்கறைகொண்டுள்ளார்களோ அந்த உறவுகளின் தனிப்பட்ட நேரடி அல்லது மறைமுக அக்கறையினை அல்லது அத்தகைய ஊழியர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ள நலன்களை மன்றத்திற்கு எழுத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

## பாகம் IV

### *நிதி*

*மன்றத்தின் நிதியம்.*

**18.** (1) மன்றமானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன்முற்போந்த நாளன்று (இதனகத்துப்பின்னர் "ஜிஈஎல்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஜிவிகே, இஎம்ஆர்ஐ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் அந்நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக நிதியத்திற்கு கைமாற்றப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) மன்றத்தின் பயன்பாட்டுக்காக பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் மன்றத்தின் தத்துவங்களையும் பணிகளையும் மற்றும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் மன்றத்தினால் பெறப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து வருமானம், கட்டணங்கள் விதிப்பனவுகள், மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் என்றவகையாக மன்றத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் மன்றத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் மற்றும் புரிவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத் திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(5) சபையானது நிதியத்திலிருந்தான பணக்கொடுப்பனவு தொடர்பான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**19.** (1) மன்றத்தின் நிதியாண்டு ஆனது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது மன்றத்தின் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் வேறு எல்லாக் கொடுப் பனவுகள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் மன்றத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) சபையானது, கணக்காய்வாளருடைய அறிக்கையானது எந்த நிதியாண்டுக்கு தொடர்புறுகின்றதோ அந்த நிதியாண்டின் முடிவின் நூற்றி ஐம்பது நாட்களினுள் அமைச்சருக்கு அத்தகைய அறிக்கையுடன் சேர்த்து கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகளின் கூற்றை சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர் அதனைப் பெற்றுக் கொண்டு இரண்டு மாதங்களினுள் அத்தகைய கூற்றையும் அறிக்கையையும் பாராளுமன்றம் முன்னர் இடுதல் வேண்டும்.

*குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கையிலான எதிர்வாதம்.*

**20.** (அ) சபையின் உறுப்பினர் ஒருவரால்;

(ஆ) மன்றத்தின் எவரேனும் ஊழியர் அல்லது முகாமை யாளர்களால்;

செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதற்கும், இச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ், விதியின்கீழ், கட்டளை யின் கீழ் அல்லது பணிப்புரையின் கீழ் அவரது கடப்பாட்டை நிறைவேற்ற செய்வதில் அல்லது அது சம்பந்தமாக அல்லது அவரது கடப்பாட்டில் கொள்ளப்பட்ட நிறைவேற்றுகையின்போது அவர் உரிய விழிப்புக் கவனத்தையும் நியாயமான கவனிப்பையும் பிரயோகித்துள்ளார் அல்லது நல்லெண்ணத்துடன் செயலாற்றி யுள்ளார் என அவர் எண்பித்தால், அது ஏதேனும் குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கையின் எதிர்வாதம் ஒன்றாதல் வேண்டும்.

*உறப்பட்ட செலவினங்கள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்.*

**21.** இச்சட்டத்தின்கீழ் அல்லது மன்றத்தின் பணிப்புரையின் மேல், மன்றத்தினால் அல்லது அத்தகைய ஆளினால் செய்யப் படுகின்ற ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர், மன்றம் அல்லது அத்தகைய ஆளுக்கு எதிராககொண்டு வரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென அந்நீதிமன்றம் தீர்ப்பளித்தால், சபையின் உறுப்பினரினால் அல்லது வேறு எவரேனும் அலுவலரினால் அல்லது மன்றத்தின் ஊழியர் அல்லது முகவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் மன்றத்தினால் அல்லது இப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் செலவு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் V

## பொது

*மன்றமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனமாக கருதப்படுதல்.*

**22.** மன்றமானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன் றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடு அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*மன்றத்தின் உறுப்பினர்கள் அலுவலர்கள் மற்றும் ஊழியர் கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.*

**23.** சபையின் எல்லா உறுப்பினர்களும் மன்றத்தின் பி.நி.அ. மற்றும் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் மன்றத்தின் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற் குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அமைச்சரின் பணிப்புரைகள்.*

**24.** அமைச்சரானவர் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் மற்றும் புரிவதற்குமான பொதுவான அல்லது விசேடமான பணிப்புரை களை காலத்திற்குக்காலம் வழங்கலாம்.

விதிகள்.

**25.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மன்றமானது பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம் :-

(அ) எந்த எல்லா கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டிருக்கின்றதோ அவ் எல்லா கருமங்கள் தொடர்பிலும்;

(ஆ) சபையின் கூட்டத்தையும் அத்தகைய கூட்டத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் ;

(இ) ஊழியரின் நியமனம், பதவி உயர்வு, ஊதியம் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு அத்துடன் ஊழியர்களுக்கான விடுமுறை அனுமதி மற்றும் வேறு வேதனாதிகள் தொடர்பிலும்;

(ஈ) எந்த முறையில் சேவைகள், அவசர நிலைமைக்கான பதில் சேவைகள் மற்றும் வைத்தியசாலை செல்வதற்கு முன்னரான கவனிப்பு என்பன இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டுமோ அந்த முறை தொடர்பிலும்; அத்துடன்

(உ) மன்றத்தின் அலுவல்களுடன் தொடர்புபட்ட வேறு ஏதேனும் கருமங்கள் தொடர்பிலும்.

(2) மன்றத்தினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும் என்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அதனது வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

பேணல்கள்.

**26.** வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் :-

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஜிஈஎல் இன் நோக்கத்திற்காக சுகாதார அமைச்சினால் பேணப்படும் இந்தியாவிலிருந்தான மானியத்தின்கீழ்

கொள்வனவு செய்யப்பட்ட பிணியாளர் வண்டிகள் மற்றும் மருத்துவ சாதனம் உட்பட ஜிஈஎல் இன் அசையும், அசையாத ஆதனம் யாவும் நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்தின் அசையும் மற்றும் அசையாத ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கும் ஜிஈஎல் இன் ஊழியர்கள், சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்தின் ஊழியர்களாக, சேவையாளர் களாக மற்றும் முகவர்களாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஊழியர்கள் சேவையாளர்கள் மற்றும் முகவர்கள் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர் முற்போந்த ஜிஈஎல் இன் கீழ் அவர்களினால் துய்க்கப்பட்ட அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது மன்றத்தில் தொடர்ந்தும் பதவி வகித்தல் வேண்டும்;

(இ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதும் பயனுறுவதுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும் உடன்படிக்கைகளும், உத்தர வாதங்களும், அற்றோணித்தத்துவங்களும், சட்டப் பிரதி நிதித்துவ வழங்குகைகளும் மற்றும் எத்தன்மையினதான வேறு சாதனங்களும் அத்துடன் ஜிஈஎல் எதற்கு திறந்த வராக உள்ளதோ அதற்கும் அல்லது ஜிஈஎல் எதற்கு சாதகமாக உள்ளதோ அதற்கும் நியமிக்கப்பட்ட தேதி யன்றும் அதன் பின்னரும் மன்றத்தினால் செய்துகொள் ளப்பட்ட அல்லது மன்றத்தின் சார்பில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களாக, உறுதிகளாக, முறிகளாக, உடன் படிக்கைகளாக உத்தரவாதங்களாக அற்றோணித் தத்துவங்களாக, சட்டப்பிரதிநிதித்துவ வழங்குகைகளாக மற்றும் வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) வேறு ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறை யில் குறிப்பாக இல்லாதொழிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது பதிலீடு செய்யப்பட்டிருந்தாலொழிய நியமிக் கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதும் பயனுறுவதுமான ஏதேனும் ஒழுங்குபடுத்தும் குழுவி னால் அல்லது அதிகாரசபையினால் மாகாணசபை

யினால் உள்ளூர் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட எல்லா அங்கீகாரங்கள் அல்லது உரிமங்கள் நியமிக்கப் பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்திற்காக வழங்கப்பட்ட அங்கீகாரங்களாக அல்லது உரிமங்களாக கருதப்படுதல் வேண்டும்;

(உ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இலங்கை அரசாங்கம், அதனது திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்டக் குழுக்கள் என்பவை உட்பட இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஜிஈஎல் மற்றும் வேறு எவரேனும் ஆளுக்கு இடையில் பேணப்படும் ஏதேனும் கணக்கு ஜிஈஎல் இன் சொத்தாக அல்லது பொறுப்பாகவும்சரி நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்திற்கும் அதே உரிமையுடனான அத்தகைய வேறு ஆளுக்கும் இடையிலான கணக் கொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஜிஈஎல் இற்கும் அத்தகைய வேறு ஆளுக்கும் இடை யிலான கணக்கு தொடரப்பட்டிருந்தால் அதற்கான ஏற்புடைமை இருந்திருக்கக்கூடியவாறு எதிரீட்டு உரிமை உட்பட அதே கடப்பாடுகளுக்கும் சம்பவங்களுக்கும் அமையவும் அத்துடன் ஆகவே அத்தகைய கணக்குத் தொடர்பில் அத்தகைய வேறு ஆளினால் கொடுக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான அறிவுறுத்தல் கட்டளை, பணிப்புரை பணிப்பாணை அல்லது அதிகாரம் என்பன இல்லா தொழிக்கப்பட்டிருந்தாலொழிய அல்லது இல்லாதாக் கப்பட்டிருந்தாலொழிய அத்துடன் இல்லாதொழிக்கப் படும் வரை அல்லது இல்லாதாக்கப்படும்வரை மன்றத்திற் கும் அத்தகைய வேறு ஆளுக்கும் இடையிலான கணக்கு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் பயனுறுதலும் வேண்டும்;

(ஊ) ஜிஈஎல் இனால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்பட்டவையும் அத்துடன் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எத்தன்மை

யினதான எல்லா விண்ணப்பங்களும், வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் அல்லது மேன்முறையீடுகளும் நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்தினால் அல்லது மன்றத்துக்கு எதிராக தொடுக்கப்பட்ட விண்ணப்பங்களாக வழக்குகளாக, வழக்கு நடவடிக்கைகளாக அல்லது மேன்முறையீடுகளாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க தொடரவும்படலாம்;

(எ) ஜிஈஎல் இன் எவரேனும் ஊழியருக்கான தொழிலுக்குப் பின்னரான நன்மை தொடர்பானதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாகியுள்ளதுமான ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது வேறு பொறுப்பு தொடர்பில் ஏதேனும் ஓய்வூதிய நிதியம், பணிக்கொடை நிதியம் அல்லது நிதியீட்டப்படாத பொறுப்பு என்பன நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் விடயத்திற்கேற்ப அத்தகைய ஊழியர் தொடர்பில் மன்றத்தின் ஓய்வூதிய நிதியொன்றாக பணிக்கொடை நிதியாக அல்லது அத்தகைய பொறுப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஜிஈஎல் ஆனது அதனது ஊழியர்களின் நன்மைக்காகத் தொழில் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருந்தவிடத்து, மன்றமானது நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் அத்தகைய ஊழியர்கள் தொடர்பில் அத்தகைய சகாய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துபவராக கருதப்படுதல் வேண்டும்;

(ஐ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதான ஜிஈஎல் இன் வரிவரவுகள், மீளளிப்புக்கள், நட்டங்கள், சலுகைகள், நிவாரணங்கள், நன்மைகள் மற்றும் பொறுப்புக்கள் யாவும் நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்தின் வரி வரவுகள், மீளளிப்புகள், நட்டங்கள், சலுகைகள், நிவாரணங்கள், நன்மைகள் மற்றும் பொறுப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஒ) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஜிஈஎல் இற்கு சாதகமாக அல்லது அதற்கு எதிராக பதியப்பட்ட தீர்ப்புகள், தீர்வைகள் அல்லது கட்டளைகள் யாவும் நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்திற்கு சாதகமாக அல்லது அதற்கெதிராக பதியப்பட்ட தீர்ப்புகள், தீர்வைகள் அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஓ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஜிஈஎல் இன் சார்பாக உள்ளதான வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை, மென்பொருள் என்பன உள்ளடங்கலாக புலமைச் சொத்துக்கான உரிமைகள் யாவும் அந்நியமிக்கப்பட்ட தேதியன்றும் அதன் பின்னரும் மன்றத்தின் சார்பான அத்தகைய உரிமைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல். **27.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி–

''நெருங்கிய உறவு'' என்பது, வாழ்க்கைத்துணை அல்லது தங்கிவாழும் பிள்ளை எனப்பொருள்படும்;

''ஜிவிகே, இஎம்ஆர்ஐ லங்கா (பிறைவேற்) லிமிடெட்'' என்பது, பி.வி. 111132 கம்பெனி கூட்டிணைப்பு இலக்கத்தைக் கொண்டுள்ள கம்பெனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி எனப்பொருளாகும்;

''சுகாதாரக் கவனிப்பு வழங்குநர்'' என்பது, ஏதேனும் சுகவீனத்தினால், ஊறினால் அல்லது உடற்றகுதியீனத்தினால் பீடித்திருக்கின்ற ஆட்களுக்காக மருத்துவ மற்றும் தாதித் தொழில் கவனிப்பு மற்றும் சிகிச்சையினை பெற்றுக் கொள்வதற்காகவும் வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதப் பட்ட ஏதேனும் நிறுவனம் அல்லது தாபனத்தையும், வைத்தியசாலை, ஆதுலர் மனை, மகப்பேற்றுமனை,

மருத்துவ ஆய்வுகூடம், இரத்தவங்கி, பல்மருத்துவ நிலையம், மருந்தகம் மற்றும் அறுவைச் சிகிச்சை நிலையம், ஆலோசனை அறை மற்றும் சுகாதாரப் பரிசோதனை அல்லது சுகாதாரத்தை ஊக்குவிக்கும் சேவை என்பவற்றை வழங்குகின்ற ஏதேனும் தாபனத்தையும் உள்ளடக்குகின்றது ஆனால் ஏதேனும் ஔடதத்தை அல்லது மருத்துவத் தயாரிப்புக்களை அல்லது மருந்துப் பொருட்களை வழங்குவதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக புறநீங்கலாக பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத் தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் அவதானிப்பு இல்லம், உளநோய் வைத்தியசாலை, தனியார் மருந்தகம் அல்லது வாகடகம் அல்லது ஔடதச்சாலை அல்லது 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேத சட்டத்தினதும், 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஹோமியோபதி சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் நோக்கத்திற்கென பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனம் அல்லது வளவுகள் என்பவற்றை உள்ளடக்காது;

‘‘அமைச்சர்’’ என்பது, சுவசெரிய மன்றம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப்பொருள்படும்;

‘‘வைத்தியசாலைக்கு செல்வதற்கு முன்னரான கவனிப்பு’’ என்பது, சுகாதாரக் கவனிப்பு வழங்குநரை சென்றடை கின்றவரை ஏதேனும் சுகவீனம், ஊறு அல்லது உடற் றகுதியீனம் என்பவற்றினால் பீடிக்கப்பட்ட ஆளுக்கு வழங்கப்பட்ட முதலுதவி, அவசரநிலைமைக் கவனிப்பு அல்லது சிகிச்சை என்பவற்றை உள்ளடக்குகிறது;

‘‘சனாதிபதி’’ என்பவர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி எனப்பொருள்படும்;

‘‘கணிசமானளவு அக்கறை’’ என்பது -

(அ) கம்பெனி ஒன்று தொடர்பில் எந்தப் பங்குகளின் செலுத்தப்பட்ட பெறுமதி கம்பெனியின் செலுத்தப் பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்தை விஞ்சு கின்றதோ அந்தப் பங்குகளில் தனியாகவுஞ்சரி அல்லது ஒன்றாகவுஞ்சரி வேறொரு கம்பெனி

யினால் அல்லது தனியாளினால் அல்லது அவரது உறவினர்களினால் பயனுகர் அக்கறையை வைத்திருக்கின்றமை அல்லது அத்தகைய கம்பெனிசார்பில் தனியாளினால் அல்லது அவருடைய உறவினர்களினால் அல்லது வேறொரு கம்பெனியினால் கொடுக்கப்பட்ட செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்திற்குக் குறையாத பணத்தொகை ஒன்றுக்கான உத்தரவாதத்தின் அல்லது நட்டோத்திரவாதத்தின் உளதாயிருக்கின்ற தன்மை;

(ஆ) குழுமம் ஒன்று தொடர்பில், தனியாகவுஞ்சரி அல்லது ஒன்றாகவுஞ்சரி தனியாள் ஒருவரினால் அல்லது அவரது உறவினரினால் அதன்கண் வைத்திருக்கப்பட்ட பயனுகர் அக்கறை அக்குழுமத்தின் எல்லாப் பங்காளர்களினால் ஒப்பப் பணமாகச் செலுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின் பத்து சதவீதத்துக்கு மேற்பட்டதை பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை அல்லது அத்தகைய குழுமம் சார்பில் தனியாளினால் அல்லது அத்தனியாளின் வாழ்க்கைத்துணை, பெற்றோர் அல்லது பிள்ளை ஆகியோரால் கொடுக்கப்பட்ட அத்தகைய மூலதனத்தின் பத்து சதவீதத்திற்குக் குறையாத பணத்தொகை ஒன்றுக்கான உத்தரவாதத்தின் அல்லது நட்டோத்தரவாதத்தின் உளதாயிருக்கின்ற தன்மை;

எனப்பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**28**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*